OS:656/2018
Date: 04.07.2025
பெயர் :ராஜ்மோகன்
**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி 1.**
**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :-

ஏற்கனவே பாகம் நடந்த சொத்தின் மீது வாதி பாகம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். 1933 ஆம் ஆண்டுக்கு முன்பே பாகம் ஏற்பட்டுவிட்டது. குறிப்பாக எந்த ஆண்டு பாகம் ஏற்பட்டது என்றால் தெரியாது. பாகம் ஏற்பட்டது என்பதற்கு செட்டில்மெண்ட் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன், பட்டாவும் கொடுத்துள்ளேன். 1933 ஆம் ஆண்டு என்னுடைய தாத்தா முருகன் அவருடைய மனைவி அய்யம்மாள் பெயருக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணம் கொடுத்துள்ளார். சுமார் 1 ஏக்கர் 70 செண்ட் நிலத்தை என் தாத்தா தானமாக கொடுத்துள்ளார். தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் என்னுடைய தாத்தா பிதுராஜ்ஜித சொத்தை தானம் கொடுப்பதாகதான் எழுதியுள்ளார் என்றும், வாய்மொழியாக பாகம் ஏற்பட்ட சொத்தை பாகம் கொடுப்பதாக குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் பழைய சர்வே எண்.73 ல் மொத்தம் ஏக்கர் 7.75 ல் 1/8 பாகத்தை கொடுப்பதாக தான் குறிப்பிட்டுள்ளார் என்றால் ஞாபகம் இல்லை. சர்வே எண்.71 ல் மொத்தம் 1.75 ஏக்கரில் 1/8 பாகத்தை தானம் கொடுப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் தெரியவில்லை. எதிர்வழக்குரையில் மற்ற பாகஸ்தர்கள் யார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி பட்டா மாறுதல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. 1933 முதல் 1985 ஆம் ஆண்டு வரை பட்டா மாறுதல் செய்யவில்லை என்றும், அதற்கான பட்டாவையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சாட்சி பதிலளிக்காமல் இருக்கிறார். 1 ஏக்கர் 75 செண்டை தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்ததாக தவறாக சொல்கிறேன் என்றும், 1 ஏக்கர் 55 செண்ட் தான் தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்தார் என்றால் பட்டாவில் 1 ஏக்கர் 70 செண்ட் உள்ளது. தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின்படி பட்டா மாறுதல் செய்யப்படவில்லை என்றும், முருகன் இறந்த காரணத்தினால் அவருடைய மனைவி பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றால் செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி தான் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது. பட்டாவில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்.35/18 ஏஇ, 18 ஏஎல் சொத்துக்கள் வாதியின் சுவாதீன அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின்படி பட்டா மாறுதல் செய்யப்படவில்லை என்றும், எதன் அடிப்படையில் பட்டா மாறுதல்

செய்யப்பட்டது என்றே எனக்கு தெரியாது என்றும், தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின்படி பட்டா மாறுதல் செய்யப்பட்டதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் தகப்பனார் பெயரில் உள்ள பட்டா நிலத்தில் 1 ம் பிரதிவாதி வீரமுத்துவின் வாரிசுதாரர்கள் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் அவரவர் பெயரில் உள்ள பட்டா சொத்தில் அவரவர்கள் அனுபவம் செய்து வருகிறார்கள். நான் சொல்வதுபோல் பட்டாவின்படி யாரும் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. குழந்தை இறந்தபிறகு முறையாக பாகம் ஏற்படாமல் இருந்து வருகிறது என்று சொன்னால் குழந்தை இறந்தபிறகு அவருடைய மகன்கள் வாய்மொழியாக பாகம் செய்துகொண்டார்கள். வாதியின் அனுபவத்தில் 23 ஏர்ஸ் நிலமும், 1 ம் பிரதிவாதி வாரிசுதாரர்களின் அனுபவத்தில் 35 ½ ஏர்ஸ் நிலம் தான் உள்ளது என்றால் அதைவிட அதிகமாக தான் இருக்கும், அவர்கள் விற்பனை செய்ததை காண்பிக்கவில்லை. வாதி மற்றும் 1 ம் பிரதிவாதி வாரிசுதாரர்கள் அனுபவத்தில் 59 ½ ஏர்ஸ் உள்ளது என்றும், எங்களுடைய அனுபவத்தில் 69 ½ ஏர்ஸ் உள்ளது என்று சொன்னால் சர்வே எண்.37/13 நிலத்தை 2005 ஆம் ஆண்டு விற்பனை செய்துவிட்டார்கள். அந்த நிலத்தை வழக்கில் காண்பிக்கவில்லை. பாகம் பிரித்தால் 25 செண்ட் நிலம் வித்தியாசத்தில் பாகம் பிரிக்கமாட்டார்கள் என்றும், நில உடைமை பதிவு மேம்பாட்டு திட்டத்தில் பட்டா உள்ளதை காரணமாக கொண்டு பாகம் ஏற்பட்டுவிட்டதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, மண் வளத்தை பொறுத்து பாகம் செய்துகொண்டுள்ளார்கள். மண் வளத்தை பொறுத்து பாகம் பிரித்திருந்தால் எழுத்து பூர்வமாக எழுதியிருப்பார்கள் என்றும், வாய்மொழியாக பாகம் பிரித்துகொண்டதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 25 செண்ட் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து அனுபவித்து வருகிறேன் என்றும், பாகம் ஏற்படவில்லை என்று சொன்னால் பாகம் கொடுக்கவேண்டி வரும் என்பதால் பாகம் ஏற்பட்டுவிட்டதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. குழந்தையின் ஆண் வாரிசுகளை வழக்கில் சேர்த்துள்ளார், பெண்வாரிசுகளை சேர்க்கவில்லை. வழக்கு அவசியமான தரப்பினரை தரப்பினராக சேர்க்காததால் பாதிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு ஒரு வாரிசு இருந்தால் போதும் என்றால் சரியல்ல. பெண் வாரிசுகளுக்கு திருமணத்தின்போது சீர்வரிசைகள் செய்துவிட்டதால் அவர்களுக்கு தாவா சொத்தில் பாகம் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. 30 செண்ட் நிலம் அதிகமாக இருப்பதாக எதிர்வழக்குரையில் ஒப்புக்கொண்டுள்ளதால் பாகப்பிரிவினை ஏற்பட்டதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை

என்றால் மண் வளத்தை பொறுத்தான் பாகம் பிரித்துகொடுத்தார்கள். அவரவர்கள் அனுபவத்தில் இருந்து வரும் நிலத்தில் வீடு கட்டி வசித்து வருவதாலும், இறந்தவர்கள் உடலை அவரவர்கள் நிலத்தில் அடக்கம் செய்துள்ளதால் பாகம் ஏற்பட்டுவிட்டதாக சொல்லமுடியாது என்றால் சரியல்ல. வாதி வீடு கட்டியபோதும் நாங்கள் வீடுகட்டியபோதும் ஆட்சேபனை செய்து ஆட்சேபனையுடன் தான் நடந்துள்ளது என்றால் நாங்கள் வீடுகட்டியபோது ஆட்சேபனை எதுவும் அளிக்கவில்லை. வீடு கட்டியபோது மணல், செங்கள் எடுத்துவந்தபோது வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. என் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எதுவும் பாகம் ஏற்பட்டது என்பதற்கான ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. குழந்தையின் வாரிசுகளுக்கு இடையே முறையாக பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றும், வாதி வழக்கில் கோரியுள்ளவாறு பாகம் அளிக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. கூடுதலாக என்னுடைய அனுபவத்தில் உள்ள 30 செண்ட் நிலத்தை மற்றவர்களுக்கு கொடுக்ககூடாது என்பதற்காக ஏற்கனவே பாகம் ஏற்பட்டுவிட்டதாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, வாதி வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>:- இல்லை.

**ஒப்பம்/-DW1**

**ஒப்பம்/-சார்பு நீதிபதி, ஓமலூர்**